# அரசுப் பள்ளிகளில் பணியாற்றியவர்கள் முன் அனுமதியின்றி எம்.ஃபில் / பி.எச்.டி உயர் படிப்பு முடித்தமைக்கு பின்னேற்பு

தமிழ்நாடு அரசு

பள்ளிக்கல்வித்துறை தலைமைச் செயலகம், சென்னை – 9.

அரசு கடிதம் (1டி) எண்.356/பள்ளிக் கல்வி நாள் 2–11–2007

அனுப்புநர்:

திரு.ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப.

அரசு செயலாளர்.

பெறுநர்:

பள்ளிக் கல்வி இயக்குநர்,

சென்னை – 6.

பொருள்: தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – தலைமை ஆசிரியர்கள் முதுகலையாசிரியராகப் பணிபுரியும் பொழுது துறையின் முன்னனுமதியின்றி எம்.பில். உயர் படிப்பு முடித்தமைக்குப் பின்னேற்பு கோருவது சம்பந்தமாக.

பார்வை: தங்கள் கடித எண்.1431/டபிள்யு.1(2)/07 நாள் 22–5–07 மற்றும் 11–9–07.

(1) பார்வையில் கண்ட கடிதங்கள் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

(2) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பலர் துறையின் முன் அனுமதியின்றி எம்.பில். உயர்கல்வித் தகுதி பெற்றுள்ளனர் என்றும், இவ்வாறு துறையின் முன் அனுமதியின்றி உயர்கல்வித் தகுதி பெற்றமைக்குப் பின்னேற்பு மற்றும் ஊக்க ஊதியம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(3) அரசு ஊழியர் ஒருவர் மாலை நேர கல்லூரியில் பகுதிநேரப் படிப்பில் சேர்தல், பல்கலைக் கழகங்கள் நடத்தும் அஞ்சல் வழி கல்வி பயிலுதல் மற்றும் தனிப்பட்ட முறை (Private Study) மூலம் உயர்கல்வி தகுதி பெறுவதற்கு சார்ந்த துறைத் தலைவரின் அனுமதி பெற வேண்டும் என பின்வரும் அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(1) அரசாணை (நிலை) எண்.1341 பொது (பணிகள்–A) நாள் 27–8–1963.

(2) அரசாணை (நிலை) எண்.362 ப.ம.நி.சீ. துறை நாள் 4–11–1992.

(4) பள்ளிக் கல்வித் துறையில் 1–3–93 அன்று முதுகலை ஆசிரியர்கள் எம்.பில் / பி.எச்.டி. / பி.ஜி.டி.ட்டி.ஆ., போன்ற உயர் கல்வித் தகுதி பெற்றிருப்பின் ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என்றும், எதிர்காலத்தில் இச்சலுகை நீட்டிக்கப்படமாட்டாது என்றும், அரசாணை (நிலை) எண்.1170 நாள் 20–12–93ல் ஆணை வெளியிடப்பட்டது. பின்னர் அரசாணை (நிலை) எண்.194, பள்ளிக்கல்வி நாள், 10–10–2006ல் 1–3–93 அன்று எம்.பில் / பி.எச்.டி / பி.ஜி.டிட்டி.ஈ., போன்ற உயர் கல்வித் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ள நிலையினை மாற்றி அனைத்து முதுகலை ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் அரசாணை (நிலை) எண்.1170, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை நாள் 20–12–93க்கு தக்க திருத்தம் வழங்கப்பட்டது. இவ்விரு ஆணைகளும் இடைப்பட்ட காலத்தில் முதுகலை ஆசிரியர்கள் துறைத் தலைவரின் முன்னனுமதியின்றி எம்.பில்/பி.எச்.டி. / பி.ஜி.டிட்டி.ஈ., போன்ற உயர் கல்வித் தகுதிகள் பெற்றுள்ளனர் எனவும் தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி ஊக்க ஊதிய உயர்வு பலன்களை பெறும் பொருட்டு அவர்கள் கோரிக்கை அளித்து வருவதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரவித்துள்ளார். இவ்வாறு துறையின் முன் அனுமதியின்றி உயர் கல்வித்தகுதி பெற்ற தேர்வுகளில் பின்னேற்பு வழங்குவது குறித்து பொதுவான தெளிவுரையினை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

(5) பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலித்து, தலைமையாசிரியர் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பலரும் துறையின் முன் அனுமதியின்றி உயர் கல்வி பெற்றுள்ளனர் என்ற நிலையினை கருத்திற் கொண்டு மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள அரசாணைகளை பின்பற்றி பள்ளிக் கல்வி இயக்குநரின் முன் அனுமதி இன்றி இதுகாறும் உயர்கல்வித் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்கள் பொருட்டு சிறப்பு நிகழ்வாகக் கருதி பின்னேற்பு வழங்கப்படுகிறது. அதன்படி துறைசார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரயக்ள் பொருட்டு தற்போதுள்ள விதிகளின்படி ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாமென தங்களுக்கு அறிவுறுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளேன். எனினும் இதுபோன்ற நிகழ்வுகள் இனி வருங்காலங்களில் ஏற்படாத வண்ணம் கவனத்தில் கொள்ளுமாறும், துறைத் தலைவரின் முன் அனுமதி பெற்றே உயர் கல்வி பயில வேண்டும் என்பதையும், தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்த நேரிடும் என்பதையும் தங்களுக்குத் தெரிவிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளேன்.

ஒப்பம்

அரசு செயலாளருக்காக.

# Ph.D., M.Phil., படிப்பிற்கு பின்னேற்பு வழங்கியது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பொருந்தும்

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.

ப.மு.எண்.79286/டபிள்யு 5/3/07 நாள் : 28.11.2007.

பொருள்: மேல்நிலைக் கல்வி – உதவி பெறுபவை – உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் முதுகலையாசிரியர்கள் எம்ஃபில், பயின்றமைக்கு பின்னேற்பு வழங்க வேண்டியது – சார்ந்து.

பார்வை: 1. ஆசிரியர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள்.

2. அரசுக் கடிதம் (1டி) எண்.356 பள்ளிக்கல்வி நாள் 2.11.07.

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகவும் முதுகலையாசிரியர்களாகவும் பணிபுரியும் பலர் துறையின் முன் அனுமதியின்றி எம்ஃபில் உயர்கல்வி பயின்றமைக்கு பின்னேற்பு வழங்குவது மற்றும் ஊக்க உயர்வு வழங்குவது குறித்தும் பார்வை '2'ல் கண்டுள்ள அரசுக் கடிதத்தில் அரசின் தெளிவுரைகள் மற்றும் சிறப்பு நிகழ்வாகத் தகுதி பின்னேற்பும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசின் ஆணை நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் எனத் தெரிவிப்பதுடன், அதன்படி தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வு அலுவலர்களக்கு அறிவிக்கப்படுகிறது.

(ஒம்) தெ. ஜெகன்னாதன்
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்: அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

நகல்: முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள்.